உ
சிவமயம்



தென்மராட்சி - மீசாலை மேற்கை வதிவிடமாகக் கொண்ட

அமரர்

# திரு. ஆறுமுகம் வைரமுத்து

அவர்களின் சிவபதம் குறித்த

# நிஜத்தின் நிழல்கள்....

13.05.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பான அப்பாவாய்
அருமை மிகு கணவனுமாய்
ஆசையாய் கதை சொல்லும் தாத்தாவாய்
பண்பாடு அறம் உறவு உரிமை எனும்
பண்பாட்டை புகட்டும் அண்ணனுமாய்
பாரினில் வாழ்ந்து சென்ற தெய்வமே
கண்ணீர் மல்க இஃது
காணிக்கை ஆக்கி நின்றோம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

அமரர்

# திரு. ஆறுமுகம் வைரமுத்து

உருவாய் உறவில் 09 – 05 – 1938



அருவாய் பிரிவில் 13 – 04 – 2006

## திதி வெண்பா

ஆண்டு பார்த்திபத்தின் பங்குனிப் பூரணையில்
பூண்ட வாழ்வு தறி போனது மென்- தாண்டவனின்
அடியிணைக்கே சென்று வைரமுத்து தான் வாழ
துடி துடித்தோம் துயரினிலே நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான் - நாயகனே
வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.

## தேவாரம்

கருவுற்ற காலத்தே யென்னை ஆண்டு
களற் போது தத்தளித்த கள்வர் போலும்
செருவிற் புரமூன்றும் அட்டார் போலும்
தேவர்க்குந் தேவராஞ் செல்வர் போலும்
மருவிப் பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்கலுற்ற
இருவர்க் கொருவராய் நின்றார் போலும்
இன்னம் பர்த் தான்தோன்றி யீசனாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடை எம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாத வரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.

## திருவிசைப்பா

தாயில் நேர் இரங்கும் தலைவ ஓ என்றும்
தமியனேன் துணைவ ஓ என்றும்
தாயினான் இருந்து புலம்பினால் இரங்கு
நலம்புரி மாதங் கோயில்
வாயின் நேர் அரும்பு மணி முருக்கவர்
வணிளஞ் சோலை மாந்தளிர் செந்
தியின்றோ அரும்பு பெரும் பற்றப் புலியூர்
திருவளர் சிற்றம்பலமே

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும் எமக்கமு
தாமெம் பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டு கொண் டாருயிர் மேற்
பந்தம் பிரியப் பிரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சொல்லுவது அறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்து அருளி என்னை
வழிக் கொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லை அம்பலத்துள் ஆடும்
சேவடி போற்றி என்ன

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திரு நகை
அத்திக்கிறை சந்திச் சரவண
முத்துக்கொரு வித்துக் குருபர வெனவோதும்
முக்கட்பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திரு வரு
முப்பத்மு வர்க் கத்தமரு மடிபேணப்
பத்துத்தலை தக்தக்கணை தொடு
மொற்றைக்கிரி மற்றைப் பொழுதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி விரைவாக
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புவன் மெச்சித்தரு பொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கா டிக்கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி வட்டக்கலைகொடு
சித்தாப்பவுரிக்குத்திகுதிகு
திக்குத்திரு திக்குத்திரிகட வெனவோதும்
கொத்துப்பறை கொட்டக்கமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப் பொரவல பெருமாளே.

## திருப்புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் நிழல்கள்..........

என்றும் இலங்கிடும் ஈழத் திருநாட்டில்
வடபால் ஒளிரும் யாழ் மா நகரில்
தென்மராட்சியாம் பிரதேசம் தன்னில்
முக்கனிகளும் நிறைந்த மீசாலைப்பதியதில்
பயிர்கள் செழித்திடு வயல்கரை யதனில்
பலபயிர் நாட்டி பயனுற உழைத்த
ஆறுமுகம் அவர் தம் மனைவியாம்
வள்ளிப் பிள்ளையும் செய்தவத்தாலே
வந்து பிறந்தவர் அறுவரே ஆகவும்
இரண்டாம் பிள்ளையே இரத்தினம் முத்தென
வைரமுத்தென நாமமும் சூட்டிட
மேதினியில் நடை போட்டிடக் கண்டார்
இவனல்லவா பிள்ளை என்றிட லானார்

சின்ன வயதில் சிறுப்பினைத் தெரிந்து
அல்லல் உதற அரிவரி தொடங்கி
வல்லதாம் தாம் பண்டிதர் தம்பையாவின்
பண்பாட்டுனே படித்திடச் சேர்ந்த
பாடசாலையோ விக்கினேஸ்வரா வென்ன
நல்ல தமிழுடன் நற்பண்பும் மிளிர
மேலைப்படிப்புக்காய் சாவ டிறிபேர்க்கில்
கண்ணெனக் கல்வியை நாட்டமுடனும்
தோட்டப் பயிருக்குப் பீலிப்பட்டையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரை இறைத்தும் நெஞ்சால் உழைத்தும்
ஓடியும் நடந்தும் ஒவ்வொரு நாளும்
தேடியே பள்ளிக் கல்வியை முடித்தனன்.

தமிழில் இருந்த பற்றது மேலிட
பள்ளிக் கல்வியை அடுத்துமே தொடுத்து
பண்டிதராகிட படிப்பும் படித்துமே
பரீட்சையதற்கு ரூபா முந்நூறு
இல்லாத அந்த தன்மையை எண்ணி
வாடியும் வருந்தியும் பேச முடியாமல்
அண்ணா தங்கைகள் நால்வரை எண்ணியும்
அதிலும் கனகி திடுமெனத் தவற
எத்தனை துன்பம் இது என்ன கொடுமை
தப்பிதம் நாமென்ன செய்தோம் தெய்வமே
தயவுடன் நிரந்தர வேலை ஒன்றினைத்
தாவென வேண்டிட தருணம் அதனில்
கலட்டிப் பிள்ளையான் கண்கண்ட தெய்வமமாம்
கையெடுத்து கும்பிட்ட காரணம் தானோ
கடிதென வந்த கடிதம் அதுவாம்
இ.போ.ச வின் நடத்துனர் ஆக
பதவி ஏற்றும் பணிகளை செய்தும்
பலபயிர் நாட்டியும் நல்லுரம் இட்டும்
கல்லுப் புரட்டியும் கடும் தரை உழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொணா பாடுகள் பட்டும் உழைத்தும்
கொடி முந்திரிகை பந்தலில் இட்டும்
குலுங்கிட காய்கள் பார்த்து மகிழ்ந்தனன்

தங்கை பூபதியை தக்க துணையென
மைத்துணண் நாராயண பிள்ளையைப் பேசி
காணி வாங்கிக் கொடுத்தும் உதவியும்
தம்வீடு மண்வீடு விட்டுக் கல்வீடு
கட்டியே முடித்தும் கவலைகள் மறந்தும்
நின்றதாம் நிலையினில் வகையிது கண்ட
சுப்பிர மணியத்தார் துணைவி செல்லம்மாவும்
இரண்டாம் மகளாய் மூன்றாம் பிள்ளையாய்
பாசமாய் வளர்த்த பரமேஸ்வரியாளை
கடின உழைப்பாளி வைரமுத்துவுக்கே
திருமணம் பேசி நிறைவேற்றி மகிழ்ந்தனர்
இல்லறம் என்னும் நல்லறச் சோலையும்
இணைந்த நல்லாள் துணையது சேரவும்
தோட்டச் செய்கையோ துலங்கிட இலங்கிட
இ.போ.ச வேலையோ இடையூறு மாயிற்று
சட்டம் திட்டம் கட்டுப்பாடு
கடமைக்கு இவைதான் தட்டுப்பாடு
சுதந்திரமான என் பூமித்தாயோ
கொழித்திட எனக்கேன் இ.போ.ச வேலை
இத்தகு எண்ணம் மேலிட வேலையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறித் தள்ளி உற்சாகத்தோடு
மண்வெட்டி பிடித்தவர் வைரமுத்தண்(ணை)ணர்
பார்த்தவர் கேட்டவர் அதிசயம் கொள்ள
பாரினில் நடந்தவர் வைரமுத்தண்(ணை)ணர்

மெத்தவே சோதனை கூடா தென்று
சத்தியம் செய்ததோ நாமதை அறியோம்
அத்தகு நேரத்தில் அருந்தவப் பிள்ளையாய்
வந்து பிறந்தாளை வாய்த்திட்ட செல்வியை
நளாயினி என நாமமும் சூட்டி
அன்பும் ஆசையும் அதிகமாய் வைத்து
பண்புற வளர்த்திட பாரினில் சிறந்திட
கல்வியை ஊட்டியே கண்ணெனக் காத்தான்.
இராசாத்தி தங்கை நாகம்மாவை
இராசா என்னும் இராச துரைக்கே
வாயில் படலையில் வாய்த்த வரனென
நேசமுடனே அவர் திருமணம் முடித்து
பாசமாய்க் குடும்பத்தில் பாங்காய் நடந்திட
நீண்ட நல்லுறவினை நினைத்திடும் வகையினில்
குன்றாது குறைகள் இல்லாது பங்கு
கொண்டிட உழைத்திட்ட பண்புகள் தானென்ன?

கண்டி வீதியில் அண்டிய காணியில்
சிறுவீடு கட்டி சிரமமும் பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டச் செய்கையும் தூரக் காவலும்
மீட்டிடக் காலமும் சரியில்லை ஆக
ஆலைதன்னை அமைத்திட மற்று
வேலைகள் பழுவெனப் பாராது ஓயாது
காலை மாலை இரவு பகலின்றி
ஞாலமும் பேசிட நல்லதோர் ஆலைக்கு
வி.பி.என் எனப் பெயரும் பொறித்துமே
சாலவும் உழைத்த சரித்திர நாயகன்

அப்பராம் ஆறுமுகத்தார் மறைந்தும்
அத்திதி இத்திதி திகதி இதுவென்று
மறவாது கிரியைகள் பேணிச் செய்தும்
குலதெய்வமோ அது சிறுகுடில் ஆயினும்
சிறப்பொடு பூசைகள் செய்திட விரும்பியும்
ஊரொடு கலந்து உள்ளங்கள் பேணி
யாரினைக் கண்டாலும் குசலம் வினவி
கவலையைப் பகிரக் கன கதை சொல்லி
நாலு பேர்க்கும் நல்லது செய்து
நீதி நேர்மை நீரது செய்யலாம்
குற்றங்கள் குறைகள் பேகட்டும் இனிமேல்
சமாதானமே சிறப்பெனச் சொல்லிடும்
பண்பினால் பேச்சினால் ஊரதில் மதிப்பும்
எத்தனை மேன்மை பணிகள் செல்லுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் நனிசிறந்தேயென
தாயினைப் பேணியே தன் வாழ்வ வளமுற
செய்திட்ட காலையில் தாயார் வள்ளியும்
பொய்யடா வாழ்க்கை பொன்னுல கங்கென
போயின போதும் பொறுமையாய் கடன்கள்
அத்தனையும் வழிவழிச் செய்து வந்ததும்
சின்ன வீட்டிலே சிறப்புடன் மகளும்
எப்படி இருப்பாள் என்றுதான் நினைந்தோ
பெரிய கல்விடும் கட்டி முடித்து
ஆங்கிலக் கல்வியை அனுதினம் நீபடி
எங்கும் இதற்கு இணையே இல்லை
என்று பகுதிநேர ஆங்கில
ஆசிரியை ஆக்கியும் பட்டப் படிப்பும்
முடித்திடப் பாதை வகுத்தும் கொடுத்தாரே

இரண்டாயிரத்தில் இடப்பெயர்வதனில்
இடையூறுகள் பல இன்னலால் வந்தும்
இனி என் கடமை என மகள் திருமணம்
என்று அன்று உறுதியும் கொண்டு
வடமராட்சியில் வாழ்ந்திட்ட போதும்
வகையிது செய்வேன் வண்ணமே காணும்
நவிண்டில் வாழ் பொன்னம்பலத்தாரும் துணை
கமலாதேவி யவரும் பெற்றிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகனாம் முத்தென வளர்த்திட்ட
நவிண்டிலில் சுஜிந்தன் பட்டதாரியாம்
நவிண்டிலில் பண்புடை ஆசிரியன் என்னத்
திருமணம் பேசி மருமகன் ஆக்கியே
தெளிவுடன் மனதை திடப்படுத்தியே
அறிவுடன் அருளும் சேரவும் மீண்டு
தென்மராட்சிக்கே வந்து மில்லினை
மீளவும் இயக்கியும் உறவு முறைகள்
வாழவும் பற்பலநலன்கள் நினைத்தும்
ஏகிட காலம் இனிது வந்ததோ

பெற்ற வாரிசம் நளாயினி சுஜிந்தன்
பெற்றிட்ட பேரர்கள் பாக்கியம் ஆகவே
பெற்றிட பெரும் பாசமும் பற்றிட
சங்கீதனோடு சங்கீர்த்தனா தினம்
தாத்தா மடியிலும் ஒக்களை இடுப்பிலும்
பேசிய மொழிகள் திருமொழி என்ன
கமுகு தென்னை சம்பு நாவலும்
மாவொடு பலாவது மாதுளை பயிர்களும்
மில்லின் வாசலில் வாழை மரங்களும்
மேற்கதில் வெண்டி கத்தரி என்னவும்
கிணற்றுக்கு அருகே எலுமிச்சை குலுங்கவும்
நாட்டி வளர்த்தவர் வைரமுத்தண்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு சிறு சுகவீனம் வந்தாலும் ஓயாது
சில்லறை வேலைகள் நாளும் பார்த்து
பெருமனதோடு வாழ்வினில் வாழ்ந்து
வைத்த பயிர்களோ காய்த்துக் குலுங்க
சித்தமதில் கல்வி சிறந்திட வேண்டும்
எத்தனையோ பேர்க்கு அறிவுரை பலபல
எத்தனையோ முறை ஊக்கப்படுத்தி
வாழ்த்திய தாத்தா காய்ச்சலே காண
வைத்திய சாலையில் மைத்துனர் இராசா
வாடியே மனந்து சோர்ந்திட உடன்நின்று
பார்த்துப் பொருமி பதைபதைத் திடவும்
மகளார், மருமகன், சம்பந்தி, சகோதரர்,
மனைவி, மற்றும் அயலவர், உறவினர்,
எல்லோரும் சென்று இனிதுரையாடியும்
பொல்லாத காலம் தான் வந்து புக்கதோ
வைத்திய சாலைச் சிகிச்சைகள் எல்லாம்
பயனற்றே போகிட பயணம் தொடங்கிட
அறுபத்தெட்டாம் அகவை தன்னை
நிறைவு செய்திட சிலநாள் இருக்கையில்
இறைவன் திருத்தாள் ஏகிட நினைவமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவியின் துயரத்தில்

அற்றைநாள் தொட்டு இது நாள் வரையில்
எடிபிடி என்று ஏதுமே சீறாது
எத்தனை பழுவான வேலைகள் இருப்பினும்
நித்தமும் அன்பொடு எந்தனை அழைப்பீரே
மில்லின் வேலைகள் தோட்ட வேலைகள்
ஊரார்க்காய் உறவினர்க்காய் இப்படி எத்தனை
எத்தனை செய்தும் ஓயாது உறங்காது
வாடினீர் என்னை வாட்ட விடிவில்லையே
தேடி நீர் போன திசை ஒன்றும் தெரியாமல்
தவிக்கிறேன் திகைக்கிறேன் தாழாமல் குமைகிறேன் நானும்
மீளவும் மனிதப்பிறவி ஒன்றுண்டெனில்
நானதில் வருவேன் மனைவியாய் மறு ஜன்மம்.

## மகள் நளாயினி

அப்பா நான் மடியினில் அரியதோர் பிள்ளையாய்
செப்பிய மொழிகளை நினைத்துப் பார்க்கையில்
எத்தனை எத்தனை கற்பனைகள் வளர்த்தீர்
எந்தனின் திருமணம் கண்டே களித்தீர்
பேரர்கள் உம்மிடம் பிரியமாய் இருக்கவும்
ஊரினை மறந்து உறவினை மறந்து
ஆலைகள் மறந்து வேலைகள் மறந்து
போனதேன் தப்பிதம் நானெதும் செய்தேனோ......?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் சுஜிந்தன்

நல்லதோர் மாமா அப்பாவைப் போல
இல்லையே இன்று எங்களின் முன்னால்
பொல்லாப்பு ஏதும் சொல்லாது தானும்
நில்லாது ஓடி நித்தமும் ஓயாமல்
எல்லோரும் காண இயற்றிடும் வேலையை
இனிமேல் யார் மாமா செய்திட வருவார்.

## பேரர்கள்

முத்துத் தாத்தா வைரத் தாத்தா
எத்தனை கதைகள் சொல்லித் தந்தீர்
பாட்டும் எழுத்தும் காட்டித் தந்து
பாலர் முன்பள்ளி கொண்டு சென்று
நாளும் எம்மை பாதுகாத்தீர்
எங்கள் கதையைக் கேட்பதற்கு
யாரிங்கு உள்ளார் ஒருமுறை சொல்லும்.

## சகோதர சகோதரி

பெற்றவர் போல எங்கள் குடும்பத்தின்
சுமைகளை எல்லாம் சுமந்த உடன் பிறப்பே
சுறுசுறுப்பாய் வேலைகளை துணிவாய் நிறைவேற்றி
வறுமையிலும் செம்மையாய் வாழ வழிகாட்டி
ஆளாக்கி அனுதினமும் அறிவுரைகள் கூறி
நிறைவாக்கி எங்களுக்கு துணை சுற்றம் தேடி
கனவாக்கி நினைத்திடவே நீரும் பறந்தீரோ
கலங்குகின்றோம் கரைகாணா கருங்கடலேயாகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர்கள்

உங்கள் உறவில் எம்மை நாம் மறந்தோம்
உங்கள் வழியில் பின்பற்றி நாம் நடந்தோம்
நேற்றுவரை நினைவுகளில் பிரிவேதுமில்லாமல்
சாற்றாமல் நீர் சென்றீர் சாவு தான் வந்ததுவோ.

## மைத்துனிமார்

சகோதரியை கைப்பிடித்தே மைத்துனராகி விட்டீர்
சகோதரர் போல சகலமும் உறவாடி பங்கு கொண்டீர்
சரித்திரம் எழுதிடலாம் சகலமும் அறிந்தவரே
நரிக்குணம் அறியாத நல்லவரே வல்லவரே.

## பெறாமக்கள்

எப்பொழுதும் கல்வியிலே சிறந்திடு என்பீரே
என்ஜினியர் டாக்டர் எக்கவுண்டன் என்றீரே
கற்பனையில் கல்வி உலகிலே நாம் உயர நீர் பார்த்து
பொற்பதம் அடைந்தீரோ பெறாமக்கள் நாம் சோர.

## மருமக்கள்

வெறுமனே மாமா என்று சொல்லிவிட முடியாதே
பெயருக்கேற்ற மாமாவாய் இருந்தெம்மை ஆதரித்தீர் சொல்லுமே
எங்கள் உயர்வுகள் ஒவ்வொன்றிலும் பெருமை கொண்டீரே
தங்காமல் திடுமெனவே சிவன் தாளில் வென்றீரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரார்

மடத்துக் கிணற்றடியில் மண்வீட்டில் நீ வாழ்ந்து
சுடலைக் கரைகளிலும் சேர்ந்த பசும் வெளிகளிலும்
மாடு கன்று மேய்த்தும் மண்கல்லு புரட்டியும்
பண்பாடு மிகப் பெற்றாய் பரீட்சை எழுதாப் பண்டிதன்நீ
பயிர்கள் மிகச் செழிக்க இ.போ.ச பஸ் ஏறி
இது வேண்டாம் என்று மர முந்திரிகை வைத்தாய்
பரமேஸ்வரியாளைப் பாரியாராய்க் கொண்டிலங்கி
ஆலையொடு அன்பையும் அவனிக்காய் ஈர்ந்தவனே
நிலைபெறுக உன் சமரச முயற்சியெல்லாம்
தலை கொடுக்கும் மிகு தருமமாய் அது காக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அப்பாவே ஆசைமகள் நான் சொல்வேன்

தன் உதிரத்தால் எனை ஆக்கி இப்பூவுலகத்தை எனக்குக்
காட்டிய என் அன்பான அப்பாவே!
அன்பு பாசம், பிரிவு, நேசம், கருணை, இரக்கம் என்ற
சொற்களின் அர்த்தங்களை எனக்குப் புரியவைத்த
என் அன்பான அப்பாவே!
எத்துணை துன்பம் வந்தபோதும் அவற்றை எல்லாம்
சகித்து என் சுகம் சந்தோசத்துக்காக அரும்பாடுபட்ட
என் அன்பான அப்பாவே!
என் கணவருக்கும் என் செல்வங்களுக்கும்
வாழ்க்கையின் முன்னேற்றப்படிகளை தெளிவுபடுத்தும்
என் அன்பான அப்பாவே!
கடைசி நிமிடம் வரை உங்கள் கடமையில் இருந்து விலகாது
எங்களுக்காகவே வாழ்ந்து எங்களிடமிருந்து
பிரிந்து போன என் அப்பாவே நினைத்து
தவிக்கிறோம் துடிக்கிறோம் வேறென்ன செய்வோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மகள்
நளாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலவர்களின் இதயத்திலிருந்து

நிலையில்லா இவ்வுலக வாழ்வில் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் வைரமுத்து அவர்கள். அன்னாரது பெற்றோர்கள் சூட்டிய பெயருக்கு ஏற்றவாறு தன் வாழ்நாளில் சிறப்பாக வாழ்ந்து காட்டியவர். சிறிய வயதில் இருந்தே தனது கடின உழைப்பால் உயர்ந்து மற்றையவர்களிற்கும் முன் மாதிரியாக திகழ்ந்தார். அயலவர்களுடன் இணைந்து செயற்படுவதில் அவரிற்கு நிகர் அவர்தான். அயல் வீடுகளில் ஒரு நிகழ்வு என்றால் தன்வீட்டு நிகழ்வு போல் முன்னின்று இரவு பகல் பாராது செய்து முடிப்பவர். அவர் அவ்வாறு முன் வந்து நிற்பதனை மங்கள விளக்கிற்கு ஒப்பிடலாம். அத்துடன் அயலவர்களின் குழந்தைப் பிள்ளைகளையும் தனது பேரப்பிள்ளைகள் போலவே நடாத்துபவர். இரவு நேரங்களில் அயல் வீடுகளில் ஏதாவது சத்தம் கேட்டாலும் முதலில் ஓடி வருபவர் இவரே. அதன் பின்னரே மற்றயவர்கள் எல்லாம் வந்து சேருவார்கள். இரவில் ஏதாவது பிரச்சினை என்றால் உரத்துக் கத்துங்கள் அப்படி என்றால் நான் ஓடி வருவேன் என்று அடிக்கடி கூறுவார். அன்னார் கடவுள் மீது பற்றுறிதி உடையவர். பல கோயில் திருப்பணிகளிற்கும் முன்னின்று உதவுவதில் முதன்மையானவர். அன்னாரின் இழப்புச் செய்தி எல்லோர் நெஞ்சங்களிலும் ஓர் இடி தாங்கியது போல உள்ளது. அதனை நினைத்து தினமும் நெஞ்சம் உருகுபவர்கள் அயலவ்ர்களாகிய நாங்கள். அன்னார் சிவனடி சேர நாம் எல்லோரும் பிரார்த்திக்கின்றோம்.

*நெஞ்சுருகும் அயலவர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்கிப்போனதுவோ ?...........

மந்தியினம் குந்தி மகிழ்வோடு விளையாட, சிந்தி விழும் மாங்கனிகள் ஏராளம், ஏராளம். என சொல்லுமளவிற்கு மாசோலை நிறைந்த பதி மீசாலை பதி. தென்மராட்சிப் பிரதேசத்தில வளம் மலிந்த இவ்வூரை மேலும் வளமாக்குவது மீசாலை வயல்வெளி. இவ் வயற்கரையில் இருந்து வடக்கு மேற்கு என பிரித்துச் சொல்லப்படுவது ஊரெல்லைத்தெரு. மடத்துக் கிணற்றடியில் வயற்கரையில் மூலைப்பக்கமாக ஊரெல்லைத் தெருவில் முதலாவது வீடாக அமைந்தது. மடத்துக் கிணற்றடி ஆறுமுகம் அவர்களின் வீடு. ஆறுமுகம் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது முத்தென வந்தவர் வையிரமுத்தண்ணர். வையிரமுத்தண்ணர் சரியான பிரையாசி. பள்ளிப் படிப்புக் காலங்களிலும் பீலிப்பட்டை இறைப்பு துலாமிதிப்பு என்று கடினமான இறைப்பு. போததற்கு கல்லுத் தரையை புரட்டி கொத்த வேண்டும். ஓய்வொழிச்சல் இல்லாத வேலைகள். பெரிய குடும்பமாம் கிடுகுவண்டிகளில் வருபவர்கள் இவர்களின் சொந்தக்காரர்களாம். மட்டுவிலில் இருந்து அடிக்கடி இவர் வீட்டு வாயில் தெருவில் வடக்கன் மாடுகளும் கிடுகு ஏற்றிய வண்டில்களை தனியாகவும் சோடியாகவும் பார்க்கலாம். எந்த நாளும் சனப்புழக்கமுள்ள வீடாக அது இருக்கும்.

திடீரென ஒரு நாள் தங்கை (படவான்) வருத்தம் கண்டு இறந்துவிட்டார் அந்த நிகழ்வுக்காக சிறுவயது என்றாலும் முதன் முதலில் போயிருக்கின்றேன். பிரிவுத்துயர் அந்த பெரும் குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பினிலெ----- சொல்லொணா பாசமான குடும்பத்தின் பாசங்கள்---- அடுத்த காணி எங்களுடையது ஆதலால் அக்குடும்ப நிலவரம் என் மனதில் பதிந்ததுவோ என்வோ? வயிரமுத்தண்ணை மெத்தப் படித்தவராம் அரசாங்க வேலையின்னும் கிடைக்கவில்லையாம் நல்ல தோட்டமாம் மிளகாய் சாக்குச் சாக்காய் செத்தலாம். உவன் வையிரமுத்து கொடிமுந்திரியும் நட்டுப் போட்டானாம் மீசாலை வேம்பிராய் ஊரெல்லாம் ஒரே பேச்சு.

தங்கை பூபதிக்கு எங்கள் சகோதரியின் பங்குக் காணிவாங்கி திருமணம் முடித்து வைத்துவிட்டு பின் தான் திருமணம் செய்தவர். தோட்ட வேலையோடு இ.போ.ச வேலை தலையிடி என உதறிவிட்டு முந்திரிகையொடும் வேம்பிராய் மண்ணில் மிகு பிரயாசப்பட்டவர். கட்டு வைரவரை கவனமாய் பக்தியுடன் வேண்டி நிற்றவர். இந்த நல் முயற்சியின் பல்லிதங்களை அவர் பெற்று பின்னும் தங்கைக்கு நல்ல அண்ணாக இருந்து திருமணம் செய்து வைத்து தாய் தந்தையரையும் பேணிப் பாதுகாத்தவர். தன் பெயர் துணைவி பெயர் மகள் பெயரையெல்லாம் சேர்த்து வி.பி.என் என்ற ஆலையை ஆக்கியவர் அவருடைய கைரைசி வி.பி.என் வீட்டிலும் பயிர் செழித்திட குறைவின்றி வாழ்ந்தவர். இடப்பெயர்விலும் கூட தன் மகள் திருமணத்தை திடமனதோடு செய்து முடித்தவர். சர்வ கலை வல்லவன் சமரசப் பேச்சுக்களில் விருப்புடையவர். ஏழைக்கும் எளியோர்க்கும் எத்தகையோர்க்கும் நல் மனதோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவளாவி நிற்பவர். இந்த நல்ல வைரமுத்தண்ணர் பேரப் பிள்ளைகளையும் கண்டவுடன் எல்லாம் நிறைவேறிற்று என்ற எண்ணம் நிறைந்தது போலும். காலை மாலை என்று பாராது கல்லுப் புரட்டி கடும் தரை செய்த வயிரமுத்தண்ணைக்கு காய்ச்சல் தான் கடைசி வருத்தமாய் தொடங்கியதோ ஊரார்க்கும் உறவினர்க்கும் நலமுத்தாய் ஒளிர்ந்த இந்த முத்து வையிரமுத்து என்று ஊர் உலகம் பேசி உறங்கிப் போனதுவோ.

திருமதி.செ.கிருஷ்ணசாமி
ஆசிரியர்
யா/ வீரசிங்கம் மாக வித்தியாலயம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பாடல்கள்

## வேம்பிராய் கலட்டி விநாயகனிடம் வேண்டுதல்

காலை விழித்தவுடன் கண்ணுக்குள் நீ வருவாய்
கலட்டி விநாயகனே கண்கண்ட தெய்வம் நீயே
கலப்பைக்குள் நீ தோன்றி காட்சியு மானவனே
கையெடுத்துக் கும்பிட்டார்க்கு கைகொடுப்பாய் நாயகனே

சின்ன வயதிலிருந்து வரம்புவழி நடந்து
உன்னிடமே வந்து உறு துயரம் தான் சொல்லி
தன்னை ஆளாக்கி தா என்று வேண்டி நின்ற
மன்னன் வைரமுத்துக் காத்ம சாந்தி நீ தருவாய்.

## வேம்பிராய் மாத்தளாய்க் கட்டு வைரவர்

மாத்தளாய் வயலில் காட்டுப் பற்றைக்குள்
மறைந்தே நீயிருந்து மாய வித்தை காட்டிடுவாய்
மாடு கன்று மேய்ப்பார் மனதில் குடியிருந்து
மடைபோடப் பண்ணும் கட்டு வைரவரே
மோதகமும் பால் பழமும் முறையாய் வாங்கி நீயும்
பாதகங்கள் பல தவிர்த்தே பக்தியினை ஏற்றிடுவாய்
சாதகமாய் வடை மாலை சாத்தி விடத்தான் குளிர்வாய்
வேதமுளாய் வைரமுத்துக் காத்ம சாந்தி நீ தருவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

காசுபணம் ஏதும் கதை சொல்ல வாராது
கண்ட பிறவிகளும் கடை ஏற்ற வாராது
தேசுடைய உடலும் தெளிவொன்றும் தாராது
ஈசன் மலர்ப்பாதம் இணைந்தால் துயரில்லை

நாட்டில் பல துயர்கள் நம் வாழ்வும் நிஜமில்லை
போட்ட கணக்குப்படி போவோம் ஒரு நாளில்
நீட்டி முடக்காமல் நெஞ்சம் பதறாமல்
காட்டிடுவோம் துயரத்தை கடன்கள் தவறாமல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது விடயங்கள்

## இதய நோய்

மனிதனில் இதயம் முக்கிய உறுப்புக்களில் ஒன்றாகும். இதயத்தின் தொழிற்பாடு முக்கியமானது. இதில் ஏற்படும் பாதிப்புக்களால் நோய்கள் உருவாகின்றன. இதயம் உடலின் சகல பாகங்களிற்கும் குருதியை வழங்கினாலும் இதயத்தின் தொழிற்பாட்டிற்கும் குருதி தேவைப்படுகிறது. இதயத்துக்கு குருதி வழங்குதலில் பாதிபுக்கள் ஏற்படும் போது இதய நோய் உருவாகின்றது.

இதயத்திற்கு குருதி வழங்கும் குருதிக்குழாய் முடியுருநாடி என்று அழைக்கப்படுகிறது. இதனூடாக குறைந்தளவு ஒட்சிசன் வாயு இதயத்திற்கு வழங்கப்படும் போது நெஞ்சுநோவு ஏற்படும். (Angina) இது ஒருவகை இதயத்திற்கு குருதி வழங்கும் முடியுரு சுற்றோட்டத்தில் உறைவு ஏற்படுவதால் இதயத்திற்கான குருதி விநியோகத்தில் தடை ஏற்படும். இதனால் இதயம் இறக்க நேரிடும். இது மாரடைப்பு (MI) எனப்படும். இதயச் சுருக்கத்திற்குரிய கணத்தாக்கத்தின் வேகத் தோற்றுவாயான குடாச்சோணை கணுவில் (SA node) இருந்து நரம்பு தசைக்கலத்திணிவு (Av node) சேர்க்கும். பின் கணத்தாக்கம் விசேடித்த நார்வப்படிகை (Bundle his) ஊடாக கடத்தப்பட்டு இதயம் தொழிற்படுத்தப்படும். இதில் ஏற்படும் பாதிப்புக்களால் மாரடைப்பு ஏற்படும். இவ்விருவகை மாரடைப்புக்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. குணங்குறிகளும் மாறுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரடைப்பு ஏற்படுவதற்கான காரணங்கள்

01) குருதியில் உயர் கொழுப்பு படிவு
02) உயர்வான குருதி அமுக்கம்
03) புகைத்தல்
04) உடற்பருமன் கூடுதல்
05) சீரான உடற்பயிற்சி இன்மை
06) நீரிழிவு நோய்
07) குடும்பப் பாரம்பரியம்

## அர்த்தமான நேரங்கள்

❋ உழைக்க நேரத்தை எடுத்துக் கொள் அது வெற்றியின் விலை.

❋ சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள் அது சக்தியின் விலை.

❋ விளையாட நேரத்தை எடுத்துக் கொள் அது இளமையின் இரகசியம்.

❋ படிக்க நேரத்தை எடுத்துக் கொள் அது அறிவின் வாயில்.

❋ நல்லவற்றை புரிய நேரத்தை எடுத்துக் கொள் அது இன்பத்தின் பாதை.

❋ திட்டமிட்ட நேரத்தை எடுத்துக் கொள் அது சாதனைக்கு வழி.

❋ அன்பு காட்ட நேரத்தை எடுத்துக் கொள் அது இறைவனின் கொடை.

❋ சேவைபுரிய நேரத்தை எடுத்துக் கொள் அது வாழ்க்கையின் குறிக்கோள்.

❋ சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள் அது இதயத்தின் இன்னிசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வார்த்தைகள்

- ஒருவனது வாய்ப்பேச்சைக் காட்டிலும் அவனுடைய மௌனம் அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.
- ஒருவனுடைய பெருமையானது அவனுடைய பணத்தையும் அந்தஸ்தையும் பொறுத்ததல்ல அவனுடைய குணத்தை யும் நடத்தையையும் பொறுத்ததே.
- அவன் என்ன செய்வான் என எண்ணுவதை விட நீ என்ன செய்யப் போகிறாய் என சிந்திப்பதே மேல்.
- முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும் ஆனால் உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது.
- நீ வெற்றியின் ஏணியில் ஏறும் போது ஏணி சரியான சுவரின் மேல் சாய்ந்திருக்கின்றதா என உறுதி செய்து கொள்.
- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட ஒரு கணப்பொழுதேனும் உதவி செய்வது மேல்.
- நலமாக இருக்கும் போது நோயைப் பற்றி தெரிந்து கொள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

※ அறியாமை இருளை அகற்றி

அறிவொளி ஏற்றி வைப்பது கல்வி.

※ கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம்

சிறப்பைக் கொடுப்பது கல்வி.

※ உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமின்றி

எவருக்கும் உரியது கல்வி.

※ இன்பத்தையும் இனிமையையும்

என்றும் எப்போதும் தருவது கல்வி.

※ பட்டத்தையும் பதவியையும்

பவளமாய் தருவது கல்வி.

※ கற்கும் போது கசப்பை ஏற்படுத்தி

கற்றபின் இனிப்பைத் தருவது கல்வி.

※ நாட்டை ஆழ்வதற்கும்

நல்வழி செய்வதற்கும் உரியது கல்வி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்புடையீர்,

எமது குடும்பத்தலைவர் திரு.அறுமுகம் வைரமுத்து அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு உடனே வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், நோய்வந்துற்ற போது காப்பாற்றுவதற்கு இறுதிவரை போராடிய வைத்தியர்கள், தாதிமார்களுக்கும், தொலைபேசி, தொலைநகல், மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள், வெளியிட்டோர்க்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியை என்பவற்றை முறைப்படி நடாத்திய அந்தணக் குருமார்களுக்கும், இதில் கலந்து கொண்ட அன்புள்ளங்கள் யாவருக்கும் இந் நினைவு மலரை மிக அழகாக இயற்றித்தந்த ஆசிரியருக்கும் நூல்வடிவில் ஆக்கித் தந்த கஜானன் பன்முகசேவையினர்க்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

**V. P. N அரிசி ஆலை,**
**கண்டி றோட்,**
**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

ஆறுமுகம் + வள்ளிப்பிள்ளை
↓
கிருஸ்ணபிள்ளை + சின்னத்தங்கம்

வைரமுத்து

கனகலக்ஸ்மி + வேலுப்பிள்ளை

அமரர் கனகம்மா

இராசபூபதி + நாராயணபிள்ளை

நாகம்மா + இராசதுரை

சுப்பிரமணியம் + செல்லம்மா
↓
வல்லிபுரம் + கமலாதேவி

மகேஸ்வரி + கந்தசாமி

பரமேஸ்வரி

பொன்னம்மா + இராஜரட்ணம்

பரமசாமி + கமலேஸ்வரி

இரத்தினபூபதி + நாகேந்திரன்

வைரமுத்து
+
பரமேஸ்வரி
↓
நளாயினி
+
சுஜிந்தன்

சங்கீதன்

சங்கீர்த்தனா

நன்றி

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நனன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org